# திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலுவலரின் செயல்முறை ஆணைகள்

## பிறப்பிப்பவர் : திருமதி.வே.லதா, எம்.ஏ.,

ந.க.எண்:29360/2020/அ3 நாள்: **04.01.2022**

பொருள்: கருணை அடிப்படை பணிநியமனம் - 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறைப்படுத்துதல் - ஆணை மற்றும் வழிமுறைகள் வெளியிடப்பட்டது - திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகு - திரு.ம.சிவராம், இளநிலை வருவாய் ஆய்வாளர் - பணிவரன்முறை ஆணையிடல்.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.48 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த்துறை, நாள்.26.02.2021.
2. கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக கடித எண்: ஆ.கு.3/18395/2020 நாள்:1.11.2021.
3. கூடுதல் தலைமைச் செயலர்/ வருவாய் நிருவாக ஆணையர் அலுவலக கடித எண்: ஆ.கு.3/18395/2020 நாள்:22.11.2021.
4. தொடர்புடைய ஆவணங்கள்.

----------

ஆணைகள்:

பார்வை1-ல் காணும் அரசாணை பத்தி 5-ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணியினை விரைவில் பணிவரன்முறை செய்திடும் பொருட்டு எவ்வித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (One level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்ட வருவாய் அலகில் 02.02.2016 முதல் 31.12.2019 வரை பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ம.சிவராம், இளநிலை வருவாய் ஆய்வாளர் என்பவருக்கு பணிவரன்முறை செய்திட ஏதுவாக அசல் சான்றுகளுடன் முன்மொழிவுகள் நிலக்கோட்டை வட்டாட்சியரிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

பார்வை 1-ல் காணும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி, கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராக தற்காலிக பணிநியமனம் செய்யப்பட்ட திரு.ம.சிவராம் என்பவரது பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக அசல் சான்றுகள் மற்றும் பணிவிபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

தனியரது இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையிலான பணியினை வரன்முறை செய்ய எந்தவித விதித்தளர்வும் (Relaxation of Rules) அரசாணைகளுக்கு விலக்கும் (Exemption of Government Orders) தேவைப்படவில்லை. எனவே, தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | அலுவலர் பெயர் | பணியேற்பு செய்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | திரு.மா.சிவராம்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>தனிவட்டாட்சியர்(கு.பொ)அலுவலகம்,<br>கொடைக்கானல். | 15.11.2019<br>முற்பகல் | 15.11.2019<br>முற்பகல் |

3) மேலும், இவ்வுத்தரவு குறித்து தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒம்./வே.லதா,
மாவட்ட வருவாய் அலுவலர்,
திண்டுக்கல்.

/உ.ந.உ.ப/

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (பொது),
திண்டுக்கல்.

பெறுநர்: சம்பந்தப்பட்ட நபர்.
நகல் : முதன்மைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-05.
நகல் : தனிவட்டாட்சியர்(கு.பொ), கொடைக்கானல்.
நகல் : "அ-3" இருப்புக் கோப்பிற்கு.
நகல் : உப்ரி "அ-3" இருக்கைக்கு.